யாழ்ப்பாணம்

★ முன்னாள் அதிபர் 'ஜே. ஆரின்' பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. அண்மைக் காலமாக நாட் (4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 01 இதழ் 219
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17 — 09 — 1992


## மணலாறு, வெற்றிலைக்கேணியில் கடும் மோதல்

(கொழும்பு) மணலாறிலும் வெற்றிலைக்கேணியிலும் நேற்றுமுன்தினமிரவும், நேற்று அதிகாலையும் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் கடும்மோதல் இடம்பெற்றதாக கூட்டுப் (4ம் பக்கம் பார்க்க)

## ★ ராஜீவ் கொலை வழக்கு புலிகள் சார்பில் சர்வதேச வழக்கறிஞர்!

(கொழும்பு) ராஜீவ் கொலைவழக்கில் புலிகள் சார்பில் சர்வதேச புகழ் பெற்ற வழக்கறிஞர் ஒருவர் ஆஜராகலாமென எதிர்பார்க்கப்படுவதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (4ம் பக்கம் பார்க்க)

# ★ நாட்டில் தீயசக்திகள் பிரேமதாசா அரசைக் கவிழ்க்க இராணுவப் புரட்சிக்கு முயற்சி

## 'ஒஸி' அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசா அரசுக்கு எதிராக இராணுவத்தை திசை திருப்பி புரட்சி ஒன்றை ஏற்படுத்த, வெளிநாட்டு உதவியுடன் நாட்டினுள் சில தீயசக்திகள் முயற்சித்து வருவதாக மக்கள் கட்சித் தலைவர் திரு. ஒஸி அபயகுணசேகரா எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்; தம்மை இனம் காட்ட விரும்பாத சக்திகளே இவ் வாறானதொரு நிலையை ஏற்படுத்தி நாட்டின் ஸ்திரத் தன்மையை சீர்குலைக்க முயலுகின்றன. இச்சக்திகளுக்கு தாராள நிதிஉதவி கிடைக்கிறது. இதன்மூலம் அரசைக் கவிழ்க்கவும் புதிய புரட்சிக்கும் (4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் மட்டும் 247 படை முகாம்கள்

(மட்டக்களப்பு) கிழக்கு மாகாணத்தில் தற்போது 247 படை முகாம்கள் இருப்பதாக புள்ளி விபரமொன்று தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் 76 படை முகாம்களும் திருமலை மாவட்டத்தில் 121 படைமுகாம்களும் 50 பொலிஸ் நிலையங்களும் இருப்பதாக அப்புள்ளி விபரம் மேலும் தெரிவிக்கின்றது.

இவற்றைவிட கிழக்கின் (4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு) கடந்த சில தினங்களாக கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன. (4ம் பக்கம் பார்க்க)

## 650 படையினர் யுத்தத்தில் காலிழப்பு

(கொழும்பு) வடக்கு-கிழக்கில் கடந்த இருவருடப்போரில் மாத்திரம் 650 படையினர் கால்களை இழந்து அங்கவீனமுற்றுள்ள (4ம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனுக்கு குடாநாடு எங்கும் அஞ்சலி

(யாழ்ப்பாணம்) லெப். கேர்ணல் திலீபனின் 5-வது ஆண்டு நினைவு தின நிகழ்ச்சிகள் நேற்று 2-வது நாளாக யாழ் குடாநாடு முழுவதும் எழுச்சி பூர்வமாக கொண்டாடப்பட்டது.

வீதிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டும், திலீபனின் உருவப்படங்கள் வீட்டிற்கு வீடு மற்றும் வீதிகள் எங்கும் வைத்து அஞ்சலி செய்யப்பட்டன.

'திலீபனின்' நாடக நிகழ்ச்சியும், தமிழ் ஈழப் பாடல்களும் (4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா விஜயம்

(வவுனியா)
வடபகுதி ராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ... [illegible] சில்வா வவுனியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார்.

இவர் அங்கு இராணுவ உயரதிகாரிகளையும் மற்றும் பலரையும் சந்தித்து உரையாடினார். (கே)

## வடக்கு கிழக்கு இணைப்பா? இல்லையா? 'அக்.2ல்' தெரிவுக்குழு முடிவு

(கொழும்பு) வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபையா? இல்லையா? என்பதை அக்டோபர் 2ம் திகதி நாடாளுமன்ற தெரிவுக்குழு முடிவு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட்ட மாகாண சபை மட்டத்திலேயே அதிகாரப் பரவலாக்கல் இருக்க வேண்டுமென தமிழ்க்கட்சிகள் அனைத்தும் வற்புறுத்திவருகின்றன. (4-ம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

(பளை)
இயக்கச்சி முகாமிலிருந்து இரவு நேரங்களில் குடிமனைகளை நோக்கி ஷெல் வீச்சும் துப்பாக்கிச் சூடும்நடைபெறுகின்றது.

இச்ஷெல்லினால் மீண்டும் தங்கள் இடங்களுக்கு சென்ற மாசார் சோரன்பற்று மக்கள் திரும்பவும் இடம்பெயர்ந்து பளை, வரணி, கொடிகாமம் போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளார்கள்.

இதேவேளை இயக்கச்சியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் சங்கத்தார்வயல், கோவில்வயல் பகுதி யிலுள்ள வீடுகள், மதில்கள் போன்றவற்றை உடைத்து தமது நிலைகளை பலப்படுத்தி வருவதாக வீடு பார்க்கச் சென்றவர்கள் தெரிவிக்கின்றனர். (156)

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
நீர் கிடைக்கும்போதே சேர்த்துக்கொள்

## தனிநபர் வருமானம்: இலங்கை முதலிடம்

(கொழும்பு) தென். கிழக்கு ஆசியாவிலேயே தனி ஒரு நபர் பெறும் வருமானம் இலங்கையிலேயே கூடுதலாக உள்ளதென உலக (4ம் பக்கம் பார்க்க)

## 100 கோடி ரூபா ஊழல் ஜெயலலிதா அரசுக்குஎதிராக வழக்கு தாக்கல் செய்ய முடிவு

### -- ஆளுநரிடம் கருணாநிதி மகஜர் --

(சென்னை) தமிழக முதல்வர் செல்வி ஜெயலிதா மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள், ஒரு சில அரச உயர் அதிகாரிகள் ஊழல் புரிந்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் ஒன்றை தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று மாலை தமிழக ஆளுநரிடம் கையளித் (4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி- 6800)

### கைலேஞ்சி அன்பளிப்பு

உள்ளூர் கைத்தறியில் உருவான கைலேஞ்சி ஒன்று. மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் நூறு அனுப்பி அன்பளிப்பாகப் பெறுங்கள். உங்கள் அபிமான மில்க்வைற் நீலசோப் கட்டி ஒன்றின் விலை ரூபா 7/- மட்டுமே. மில்க் வைற் (எ- 2444)

## தமிழ் மாணவர் சிங்களம் பயில நிர்ப்பந்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை ஆகியபகுதிகளில் தமிழ் மாணவர்கள் சிங்களம் கற்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுகிறனர்.

இதற்காக சிங்கள தொண்டர் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் க. பொ.த சாதாரண தரத்தில் சிங்களம் சித்தியடைந்த தமிழர்களை நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது. [க]

## இன்று

(உடுவில்)

''விபுலானந்தர் அறிக்கை கோட்பாடுகள்'' என்னும் பொருள்பற்றி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசாவினால் இன்று 17ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆய்வுரை நடைபெறும்.

ஈவ்லின் இரத்தினம் பல்லின பண்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்ச்சி உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி. வி. செல்லையா தலைமையில் நடைபெறும். (109)

## இராசி பலன்

17-09-1992

வியாழக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 01)

பஞ்சமி ந. ப. 11-59வரை, கார்த்திகை பி. இ 5-14 வரை. இராகுகாலம் பகல் 1-33 முதல் 3-03 வரை. சுப நேரம் காலை 7-33 முதல் 9-03 வரை. கார்த்திகை விரதம். மரணயோகம்

மேடம்: எதிர்பாராத நன்மை, உல்லாச செலவு, புகழ்.

இடபம்: திடீர் மனக்குழப்பம், உடல்சோர்வு, அலைச்சல்.

மிதுனம்: எதிர்பார்த்தவை கைகூடும், பெரியார் ஆசி, கடன்வரவு.

கடகம், புதிய தொடர்பு, பகைவெல்லும். காரியசித்தி

சிங்கம்: குடும்பத்தொல்லை, அன்னிய வாசம் வேதனை.

கன்னி: தொழில் தகராறு, அனுவசிய பயம், தப்பபிப்பிராயம்.

துலாம் அதிர்ஷ்டவாய்ப்பு, நண்பர் வரவு, தெய்வீக வழிபாடு

விருச்சிகம்: மேலதிகாரிகள் சகாயம், பயணம், சகோதர உதவி

தனுசு: தொழில் முடக்கம், உடல உபாதை, குடும்ப செலவு.

மகரம்: மனைவியால் துயர், பணமுடை, வெறுப்பு

கும்பம்: கடமையுணர்வு, இனசன மகிழ்ச்சி, சுபநிகழ்ச்சி,

மீனம்: சொத்து தகராறு, அன்னியர் பகை, மனச்சுமை.

— ஜோஸ்யர்

## தீவக மாவீரர்களுக்கு நினைவஞ்சலி

(ஆனைப்பந்தி)

ஆகஸ்ட் மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தீவகத்தைச் சேர்ந்த லெப். சாந்தன், லெப். சீனு, வீரவேங்கைகள் சீலன், நிசாந்தன், விமளன், காந்தன், சுபாஸ், முகுந்தன், கங்கை சின்னப்பதாஸ், எட்றிக், கர்ணன், ஆனந்த், மணியரசன் ஆகிய பதினொன்று மாவீரர்களையும் நினைவுகூர்ந்து நடாத்தப்பட்ட நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். புகையிரத நிலையத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழீழ மவீரப் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தீவகப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி, கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, கடற்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் திரு. மறவன் ஆகியோர் அஞ்சலியுரைகள் நிகழ்த்தினர்கள். (101)

## 2 லட்சம் ரூபாவுக்கு நூல்கள் பெற முயற்சி....

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் பொதுநூலகம் வாசகர்களின் நன்மை கருதி கிளிநொச்சியின் மத்தியிடமான உள்ளூராட்சி திணைக்களத்திற்கு முன்பாக அமைந்துள்ள பாலிப்பண்ணை கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

இதற்கு முன்பு நகரில் இயங்கி வந்த பொதுநூலகம் இராணுவத்தால் தீக்கிரையாக்கப்பட்டதும் பின்னர் சரடிப்போக்கில் நூலகம் இயங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

பிரஸ்தாப நூலகத்திற்கு சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமான டத்தகங்களை தருவிக்கவும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ரி. வி. கிருஸ்ணசாமி நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டது, (83)

## படையினரிடம் சிக்கிய மக்கள் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கு வலிமேற்குப் பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் இராணுவத்திடம் அகப்பட்ட பொதுமககளின் விபரங்களை தறபோது சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் திரட்டி வருகிறது.

மேற்படி பகுதியில் அகப்பட்டு திரும்பி வராத பொது மக்களின் பெயர் விபரங்களை இதுவரையில் அறியத்தராமல் இருப்பவர்கள் உடன் வந்து அவற்றைப் பதிவுசெய்து கொள்ளுமாறு சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முழுவிபரங்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் அடுத்தவாரம் சென்று விபரங்களை இராணுவ பலாலிஅதிகாரிகளிடம் சமர்ப்பித்து அவர்களின் நிலைமை பற்றிஅறிந்து வருவதற்கு ஏற்பாடுகளை செய்துவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## அகதிகள் கூட்டுச் சமையல் செய்ய ஏற்பாடு

(மானிப்பாய்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளாக தங்கியுள்ள 102 குடும்பகளைச் சேர்ந்த 484 பேருக்கு கூட்டுச்சமையல் செய்து சாப்பிடுவதற்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றது.

இதன்படி மானிப்பாய் அந்தோனியார் கோவில்ல் தங்கியுள்ள 59 குடும்பங்களுக்கும் கூழாவடி முகாமிலுள்ள 10 குடும்பங்களுக்கும் கட்டுடை பிள்ளையார் கோவிலில் தங்கியுள்ள 33 குடும்பங்களுக்கும் அரிசி, மரக்கறி, பருப்பு போன்ற உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

இவற்றைக்கொண்டு இவர்கள் கூட்டுச்சமையல் செய்து சாப்பிடுவதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

ஏற்கனவே எம்மால் கோரப்பட்ட நல்லூர் பொது சன நூலகக் கட்டிட திருத்த வேலைக்கான கேள்விப் படிவங்களை வழங்கும் திகதியும், பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியும், பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது:-

1. கேள்விப்படிவங்கள் வழங்கப்படும் திகதி — 21-09-92 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை

2. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி — 23-09-92 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணி வரை

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 16-09-1992 (ஏ-2446)

## சில்லாலை நோக்கி ஷெல் தாக்குதல்

(மானிப்பாய்)

மாதகலிலிருந்து சில்லாலைப் பகுதியை நோக்கி சில நாட்களாக தொடர்ந்து ஷெல் தாக்குதல் இடம்பெற்று வருகின்றது.

இதனால் அப்பகுதியில் குடியிருந்த சிலர் அங்கு தொடர்ந்து இருக்க முடியாத நிலையில் இடம்பெயர்ந்துள்ளனர்.

படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் துப்பாக்கிச் சன்னங்களும் இட்பகுதியில் வந்து விழுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71,

## தியாகி திலீபன் நினைவாக அடையாள உண்ணாவிரதம்

(புலோலி)

வலிகாமம் கிழக்கு கோட்ட கடற்புலி பிரிவினரால் தியாகசீலன் திலீபனின் 5-ம் ஆண்டு நினைவாக பின்வரும் இடங்களில் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறவுள்ளன.

இன்று 17-ம் திகதி குருநகர் டேவிட் வீதியிலுள்ள திலீபன் நூல் நிலையத்திலும், 18-ம் திகதி பாண்டியன்தாழ்விலும், 19-ம் திகதி பாஷையூர் எழிலூரிலும், 20-ம் திகதி நாவாந்துறையிலும் 21-ம் திகதி குருநகர் சென்ரெக்ஸ் சனசமூக நிலைய முன்றலிலும், 22-ம் திகதி கொழும்புத்துறையிலும் 23-ம் திகதி குருநகர் சனசமூக நிலையத்திலும் 24 ம் திகதி பாஷையூர் சந்தியிலும் 25- திகதி உதயபுரத்திலும் அடையாள உண்ணாவிரதங்கள் இடம்பெறும்.

வடமராட்சி கிழக்கில்

தியாகி திலீபன் நினைவாக வடமராட்சி கிழக்கில் 25ம் திகதிவரை கிராமங்கள் தோறும் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறவுள்ளன.

இன்று 17ம் திகதிகுடத்தனையிலும், 18ஆம் திகதி அம்பனிலும், 19ம் திகதி நாகர் கோவில் வடக்கிலும், 20-ம் திகதி குடாரப்புவிலும். 21ம் திகதி மாமுனை வடக்கிலும், 22ம் திகதி செம்பியன்பற்றிலும், 23ம் திகதி நெல்லியானிலும் 24ம் திகதி தாளையடியிலும் 25ம் திகதி வத்திராயனிலும் இவ் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறும் [61]

## தையல் பயிற்சி வகுப்பு

(நெல்லியடி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, கரவெட்டிப பிரிவில் 185 பெண்பிள்ளைகள் தையல் பயிற்சியை மேற்கொண்டுவருகிறார்கள்

தினமும் மூன்றுநேர வகுப்புகள் நடைபெற்றுவருகிறது. (160)

தபாலகம

## மீண்டும் பழைய இடத்தில்

(ஏழாலை)

தற்காலிகமாக நீதியம்பனை பிள்ளையார் கோவில் முன்பாக இயங்கிவந்த மல்லாகம் உப தபாலகம் மீண்டும் மல்லாகம் அளவெட்டி வீதியில் பழைய இடத்திலேயே இயங்கிவருகின்றது. [162]

பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்ளோமா

பகுதி நேரம்/ முழுநேரம்

## பரீட்சைகள் 1991

மேற்படி பரீட்சைகள் 4-11-92 அன்று ஆரம்பமாக உளளன. பரீட்சை அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படும். கிடைக்கப்பெறுதவர்கள் 4-11-92 க்கு முன்பு பரீட்சைக்கிளையில் வந்து பெற்றுகொள்ளவும்

பதிவாளர்

(எ-.445

உ

கிவமயம்

''கேடில் விழுச் செல்வம் கல்வியொருவற்கு மாடல்ல மற்றையவை''

வாரிவளவு நல்லியக்கச் சபை - காரைநகர்

## காரைநகர் மாணவர்களுக்கான நவராத்திரி இசை-நடனப் போட்டிகள் - 1992

இசைப் போட்டிகள்: 1992 - 10 - 07
புதன்கிழமை பிற்பகல் 02-00 மணி
இடம்: யா/நாவலர் மகாவித்தியாலயம்

நடனப்போட்டிகள்: 1992 - 10 - 10
சனிக்கிழமை பிற்பகல் 02-00 மணி
இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நல்லூர்

விசேட நிகழ்ச்சி யாராவது அளிக்க விரும்பின் எம்முடன் தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்துகொள்ளலாம்'

விளம்பர ஆதரவு:
செல்லப்பா களஞ்சியம்
ஆஸ்பத்திரி வீதி
(யாழ். பஸ்நிலையம் முன்பாக)
[சி-6815]

## ★ நிவாரணத்தை அரைவாசியாகக் குறைப்பது

# கிளிநொச்சி மாவட்ட இடம்பெயர்ந்த மக்களை கடுமையாகப் பாதிக்கும்

(யாழ்ப்பாணம்)

நிவாரணத்தை அரைப்பங்காக குறைப்பதாக தங்களுடைய அரசு எடுத்துள்ள முடிவானது கிளிநொச்சி மாவட்ட இடம்பெயர்ந்த மக்களை மிகவும் கடுமையாக பாதிக்கும்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு கிளிநொச்சி மாவட்டம் பூராவும் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் சார்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ம் தேதி கிளிநொச்சி அரச செயலகத்திற்கு முன்னால் நிவாரண வெட்டை எதிர்த்து நடத்திய மறியல் போராட்டத்தின் முடிவில், தென்னிந்திய திருச்சபை மக்கள் சார்பில் திட்டப்பணிப்பாளர் ஊடாக இம்மகஜர் அனுப்பப்பட்டது.

இம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

மிகவும் பின்தங்கிய மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் 1958 முதல் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற பல வன்செயல்களால் தங்களது உறவினர்களையும், சொத்துக்களையும் இழந்து ஸ்ரீலங்காவில் ஏனைய பிரதேசங்களில் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வதில் நம்பிக்கையை இழந்து தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்குடன் இங்கு குடியேறியவர்களே.

இங்கு கல்வி, சுகாதாரம், மருத்துவம் உட்பட்ட எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையிலும் தமது உழைப்பால் நாட்டின் உணவுத் தேவையின் கணிசமான பகுதியை (நெல்) உற்பத்தி செய்யும் தொழிலாளர்களாக, விவசாயிகளாக வாழ்ந்துள்ளார்கள். எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலும் தமது உழைப்பால் பெருமளவு அந்நியச் செலவாணியை மீட்டுத் தந்து வந்துள்ளபோதும் தமது வாழ்க்கையை வறுமையுடனேயே போக்கி வந்துள்ளனர்.

1990 யூன் மாதம் ஏற்பட்ட யுத்தம் இவர்களது வாழ்க்கையில் மேலும் சோதனையாக அமைந்துள்ளது. எரிபொருள், விவசாய இரசாயனங்கள், விவசாய உபகரணங்கள் தடை செய்யப்பட்டமையால் விவசாயச்செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. விவசாயத்தையே நம்பி வாழ்ந்த மக்கள் முற்றாகத் தொழில் இழக்க வேண்டி ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மொத்த குடும்பங்களின் தொகையான 29,300 இல் 10,000 குடும்பங்களுக்கு மேல் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களின் அனைவருக்கும் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள்கூட இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் 7659 குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது.

இடம்பெயர்ந்த மக்களுடைய உணவுப் பற்றாக்குறை, சுகாதாரச் சீர்கேடு, மருத்துவ வசதியில்லாமை மிகப் பெரியளவில் குழந்தைகள் மரணத்தையும், குறைப்பிரசவங்களையும் தாய்மார்களது மரணங்களையும் ஏற்படுத்தி வருகிறது. இன்றைய யுத்த சூழ்நிலைகள், போக்குவரத்து வசதிகள் இல்லாமை அரச திணைக்களங்களின் சேவைகள் சீரின்மை ஆகிய காரணங்களால் இறப்புக்கள் பதிவில்லாது வெளிப்படாதே நடைபெறுகிறது.

இப்படியான சூழ்நிலையில் நிவாரணத்தை அரைப்பங்காக குறைப்பதாக தங்களுடைய அரசு எடுத்துள்ள முடிவானது கிளிநொச்சி மாவட்ட இடம்பெயர்ந்த மக்களை மிகவும் கடுமையாகப் பாதிக்கும். மரணவிகிதத்தை வெகுவாக அதிகரிக்கச் செய்யும்.

இன்று நடைபெற்று வருகின்ற அர்த்தமில்லாத – முடிவற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து பொருளாதாரத் தடைகளை நீக்கி இடம்பெயர்ந்த மக்களுக்கான புனர்வாழ்வு உதவிகளை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்படி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் வரையான காலத்தில் நிவாரணத்தை நிறுத்த எந்த தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக தாங்கள் நடவடிக்கை எடுத்தாலும் அது மனிதாபிமான மற்றதாகவும். மோசமான மறைமுகமான இனப்படுகொலையாகவுமே அமையும் என்பதை தங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். (அ)

---

## ஜனாதிபதி பிரேமதாசா 23ல் வெளிநாடு பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் வெளிநாட்டு விஜயம் தொடர்பான கால அட்டவணை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

சார்க் நாடுகளுக்கான அவரது விஜயங்கள் குறுகிய காலங்களாகவே இருக்கும்.

முதலில் அவர் எதிர்வரும் 23ம் திகதி பாகிஸ்தானுக்கும் நேபாளத்துக்கும் விஜயம் செய்துவிட்டு 25ம் திகதி நாடு திரும்புவார்.

பின்னர் அக்டோபர் மாதம் முதலாம் திகதி இந்தியாவுக்கு பயணமாவார். தொடர்ந்து பூட்டான்-பங்களாதேஷ் ஆகிய நாடுகட்கு சென்றுவிட்டு ஒக்டோபர் 6ம் திகதி நாடு திரும்புவார்.

பின்னர் அக்டோபர் மாதம் 10ம் திகதி மாலைதீவுக்கு விஜயத்தை மேற்கொள்வார்.

---

## தியாகி திலீபன் நினைவாக இடம்பெறும் 'சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 5-ம் ஆண்டு நினைவையொட்டி யாழ். மாவட்டத்தில் நடைபெறும் சிரமதானங்களைப் பற்றிய விபரங்கள் வருமாறு:

இம்மாதம் 19ம் திகதி தீவகக் கோட்டத்தைச் சேர்ந்த மணியரசன் குடியிருப்பு மக்கள் தமது பகுதியை துப்பரவு செய்வதிலும் வலிகாமம் கோட்டத்தைச்சேர்ந்த சண்டிலிப்பாய் முள்ளி கிராமத்தைச் சேர்ந்த 200 குடும்பங்கள் சுகாதார வசதி சம்பந்தமான சிரமதானங்களிலும், கோப்பாய்ப் பகுதி மக்கள் வெள்ளவாய்க்கால் வீதி, மெடிக்கஸ்தாஸ் அண்ணா வீதி ஆகியவற்றையும் வடமராட்சியைச்சேர்ந்த கரவெட்டி மக்கள் செங்கதிர் அறிவாலயம் சூரியகலா பாலர் பாடசாலை வீதிகள் ஆகியவற்றையும், தென்மராட்சியைச் சேர்ந்த வாகனசங்கம், வர்த்தக சங்கங்களைச்சேர்ந்த உறுப்பினர் சண்டி வீதியை திருத்தம் செய்வதிலும் ஈடுபடுவார்கள். (வி)

---

## 5 மாதங்களாக வைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை

[பண்டத்தரிப்பு]

வேரவில் அரசினர் மருந்தகமும் பிரசவ விடுதியும் கடந்த ஐந்து மாதங்களாக வைத்திய அதிகாரி நியமிக்கப்படாமல் செயல்பட்டு வருகிறன. சில ஊழியர்களே மட்டுமே இங்கு கடமையாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (72)

---

## அகதிகளுக்கு உதவ ஏற்பாடு

(பருத்தித்துறை)

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கு பிரதேச செயலர்பிரிவில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. ச. முருகேசபிள்ளை மேற்கொண்டுள்ளார்.

அவர் இது சம்பந்தமாக சங்கானை சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலர்களுடன் தொடர்புகொண்டுள்ளார். [52)

---

## தியாகி திலீபனுக்கு நினைவஞ்சலி

[பண்டத்தரிப்பு]

தியாகி திலீபனின் ஐந்தாவது நினைவை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பகுதியிலுள்ள முக்கிய சந்திகளில் திலீபனின் திருவுருவபபடம் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

மஞ்சள், சிகப்பு நிற புலிக் கொடிகளும் பறக்க விடப்பட்டுள்ளன ஒலிபெருக்கியில் திலீபனின் சொற்பொழிவுகளும், எழுச்சிக் கீதங்களும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

சங்கானை, சித்தன்கேணி, சண்டிலிப்பாய் சந்திகளில் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகிறது. (71)

---

## வடமராட்சியில் 'சனசமூக நிலையங்கள் புனரமைப்பு

[உடுப்பிட்டி]

வடமராட்சியில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள கிராமங்கள் தோறும் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தியாக்கும் வகையில் விடுதலைப்புலிகளும் மக்களும் இணைந்து பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் பருத்தித்துறை வட்ட அவைப் பிரதேசத்தில் செயலிழந்திருந்த கூவில் தீபஜோதி சனசமூக நிலையம், பொலிகண்டி மாறனைகளை சனசமூகநிலையம் ஆகிய இரண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுவருவதோடு வல்லிபுரம் குறிச்சியிலும், சிங்கை நகரிலும் இரண்டு புதிய சனசமூக நிலையங்களை அமைத்துவருகின்றனர்.

கரவெட்டி வட்டஅவை பிரதேசத்தில் அல்வாய் கிழக்கு மாயக்கை சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. பருத்தித்துறை வட்டஅவைப் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன், கரவெட்டி வட்ட அவைப் பொறுப்பாளர் திரு மணிவண்ணன் ஆகியோர் வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். (150)

---

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்திருவிழா

[பருத்தித்துறை]

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா அடுத்த மாதம் 10ம் திகதியும் கடல் தீர்த்தத்திருவிழா 11ம் திகதியும், 12ம் திகதி கேணித் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இம் மகோற்சவத்தையொட்டி விசேட மினிவான சேவைகளும் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (52-160]

---

## உலர் உணவு அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம்[

வலி-வடக்கு பிரிவில் 3வது தொடர்ச்சி உலர் உணவு அட்டை விநியோகத்திற்காக 'இ' உலர் உணவு அட்டை வைத்திருப்பவர்கள், தேசிய அடையாள அட்டை உட்பட சகல ஆவணங்களுடனும், அவர்களது கிராமசேவை அலுவலர்களை சந்திக்குமாறும் வலிவடக்கு பிரதேச செயலர் கோரியுள்ளனர்

2வது உலர் உணவு அட்டை பின்னிணைப்பில அக்டோபர் மாதத்திற்கான விநியோகம் நடைபெறமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## பாடும்மீன் - சென். றேக்ஸ் 'சாம்பியனாகத் தெரிவு

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திய 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் பாடும்மீன் கழகமும், சென். றேக்ஸ் கழகமும் சாம்பியன் கிண்ணத்தை தட்டிக்கொண்டன

18 வயதுக்குட்பட்டோருக்கிடையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பாடும்மீன் கழகம், சென் மேரீஸ் கழகத்தை 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. வி. திருஞானசம்பந்தர் மத்தியஸ்தம் வகித்தார்.

40 வயதுக்கு மேற்பட்டோருக்கிடையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். றேக்ஸ் கழகம், அரியாலை ஐக்கிய கழகத்தை 3-1 கோல்களால் வெற்றி பெற்றது.

மேற்படி இரு போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தலைவர் திரு. எம். டி. தம்பிராசாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுக்குழுத் தலைவர் திரு முருகநேசனும் கலந்து கொண்டனர். (ல)

---

## அகதிகளுக்கு குடிசைகள் அமைக்க ஏற்பாடு

[மானிப்பாய்]

தென்னிந்திய திருச்சபை மானிப்பாயில் அகதிகளாக தங்கியுள்ள மக்களுக்கு பல குடிசைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மானிப்பாய் பழைய தபாலகத்திற்கு முன்னால் தற்போது 15 குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை பூர்த்தியானதும் மேலும் 50 குடிசைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (72)

---

## ★ ஜனாதிபதி தேர்தல் வழக்கு துண்டுப் பிரசுரம் விநியோகித்தவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனுமீதான வழக்கு தீர்ப்புக்கு எதிராக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததாக சொல்லப்படும் நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் சி.ஐ.டியினால் கொழும்பு நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்திருந்தபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிறப்பிக்கப்பட்டது. (கே)

---

## புனரமைப்பு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் உருத்திரபுரம் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை விசேட ஆணையாளர் எடுத்த நடவடிக்கையை தொடர்ந்து புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (83]

---

## தமிழ்மக்கள் இடம்பெயர்வு

(திருமலை)

திருமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா முஸ்லிம் கிராமத்துக்கு அடுத்துள்ள வெள்ளை மணல் என்ற கிராமத்திலுள்ள தமிழ்மக்கள் அச்சத்தில் உப்புவெளி என்ற இடத்துக்கு இடம்பெயர்ந்துள்ளதாக தெரியவருகிறது. [59)

★ கொழும்பில்

# தமிழர்களிடம் பல வழிப்பறி; கொள்ளைக் கோஷ்டி சிக்கியது

(கொழும்பு)

கொழும்பில் தாம் சி. ஐ. டி. பொலிசார் எனக் கூறிப் பல லட்சம் ரூபாவை தமிழர்களிடம் கொள்ளையடித்து வந்த கோஷ்டி ஒன்று கைதாகியுள்ளது.

கொழும்பு கோட்டை, நாரகன்பிட்டி, வெள்ளவத்தை ஆகிய இடங்களிலேயே இவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இவர்களைக் கைது செய்த வெள்ளவத்தைப் பொலிசார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களையும், ஆபரணங்களையும் இவர்களிடமிருந்து மீட்டுள்ளனர்.

அப்பாவித் தமிழ் மக்களைத் தமது வாகனத்துக்கு அழைத்துச் சென்று ''நீங்கள் புலிகளாக இருக்கலாம். உங்கள் அடையாளத்தை நிருபித்த பின்னர் பொருள்களை எடுத்துச் செல்லலாம்'' எனக் கூறி பொருள்களை அபகரிப்பதே இவர்கள் தொழிலாக இருந்து வந்தது.

சுமார் 100 வழிப்பறிகளில் ஈடுபட்ட இவர்கள், சிலருக்குப் போலி றிசீற்றுக்களையும் வழங்கியுள்ளனர்.

வாடகைக்கு அமர்த்திய காரிலேயே இவர்கள் நடமாடி திட்டம் தீட்டித் தமிழர்களைத் துன்புறுத்தி வந்துள்ளனர்.

மேலும் இவர்களுடன் சேர்ந்த பலரைப் பொலிசார் தேடிவருகின்றனர். (கே)

வலிகாமம் வடக்கு, மேற்கில்

# ஹெலிகள் ரோந்து

(யாழ்ப்பாணம்)

மாதகல் - காரைநகர் கரையோரப் பிராந்தியத்திலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் நேற்று நண்பகல் 1 - 30 மணிக்குப் பின்னர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்று மாலை 4-00 மணியளவில் இரு ஹெலிஹொப்டர்கள் வலி மேற்கு வலி வடக்கு எல்லைப் பகுதிகளை சுற்றி பல தடவை வட்டமிட்டு நோட்டமிட்டன. (56)

# காணாமல்போன 73 தமிழர்

## படை முகாம்களில் கண்டுபிடிப்பு

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனதாக கருதப்பட்ட 73 பேரை மனித உரிமை தொடர்பாக செயலணி கடுப்பு முகாம்களில் கண்டுபிடித்துள்ளது.

1990ல் மீண்டும் யுத்தம் ஆரம்பமான பின் கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது இவர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் பெருமளவினர் இளம் வயதினர் இதில் இரு பெண்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

நாட்டில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திட்டமிட்ட பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இராணுவத்தில் பிளவினை ஏற்படுத்தவும் அரசுக்கு எதிராக புரட்சி செய்யவும் இவர்கள் இராணுவத்தை வெளிப்படையாகவே தூண்டி வருகிறார்கள்.

அண்மையில் 'ராவய' பத்திரிகையில் வெளியான வடபகுதி மீதான இராணுவ திட்டத்தின் வரைபடம் பெரும் அதிர்ச்சி அளிப்பதாயுள்ளது. இரகசிய திட்டத்தை பகிரங்கப் படுத்தியதன் மூலம் இராணுவத்திடையே பிளவொன்றை ஏற்படுத்தும் திட்டமாகவே இது கருதப்படுகிறது என்றும் கூறினார். (சி)

# தங்காலை காட்டில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

தெற்கில் காட்டுப் பகுதி ஒன்றில் ஜே. வி. பியினர் புதைத்து வைத்திருந்த பெருமளவு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் பொலிஸார் மீட்டுள்ளனராம்.

வீரகெட்டி என்னுமிடத்திலேயே இவ்வாறு பெருமளவு ஆயுதங்களை தங்காலை பொலிஸார் மீட்டுள்ளனராம்.

தெற்கில் இதுவரை காலமும் மீட்கப்பட்ட ஆயுதங்களில் இவையே பெரும் தொகையானவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் தெரிவுக்குழு இது குறித்து அடுத்த மாதம் 2ம் திகதிகூடி பரிசீலனைசெய்து தனது முடிவை வெளியிடும். இதற்கிடையில் தெரிவுக்குழு நேற்று முன்தினம் கூடியது. மீண்டும் இம்மாதம் 29ம் திகதியும் தெரிவுக்குழு கூடவுள்ளது. (சி-கே)

# ராஜீவ் கொலைக்கு இந்தியாவும் பொறுப்பு

## — சோனியா குற்றச்சாட்டு

(டில்லி)

ராஜீவின் கொலைக்கு அன்றைய இந்திய அரசும் ஒரு விதத்தில் காரணம் என்று சோனியா காந்தி 'ராஜீவ்' பற்றி எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தநூலில் குறிப்பிடப்படுவதாவது: ராஜீவ்காந்தி தேர்தலில் தோல்வியுற்றதன்பின்பு ராஜீவ் பிரதமர் இல்லத்தை விட்டு வெளியே வந்த பின்னர் ராஜீவின் பாதுகாப்பில் எவ்வளவு அசிரத்தை, எவ்வளவு கவனக் குறைவு காட்டப்பட்டது என்று நாளுக்கு நாள் நடைபெற்ற நிகழ்ச்சிகளை சோனியா குறிப்பிடுகிறார். [சு-சி]

வார இறுதியில்

# செஞ்சிலுவை குழு பலாலி செல்லும்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு நோய் துன்பங்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களை யாழ்ப்பாணம் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யும் முகமாக இவ்வார இறுதிப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பலாலி செல்வதற்கு ஒழுங்குகள் செய்து வருகிறது.

குமண கப்பலில் இவர்கள் பலாலிமுகாம் சென்று நோயாளர்கள் நிலைமைகளை அறிந்துவரவும், இயலாத நோயாளிகளை அழைத்து வருவதற்கும் முயற்சிகளைச் செய்துவருகின்றனர். (56)

ராஜீவ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கான ஏற்பாடுகளை புலிகளின் லண்டன், நியூயோர்க் அலுவலகங்கள் மேற்கொண்டு வருவதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

இவ் வழக்கில் இந்திய வழக்கறிஞர்களை அழைக்க டலிகள் அவ்வளவாக விரும்பவில்லை என்றும் 'ஐலண்ட்' குறிப்பிட்டுள்ளது. (19-சி)

மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வெற்றிலைக்கேணியில் புலிகள் படைமுகாம் மீது மோட்டர் தாக்குதல் நடாத்தியதாகவும் இதன் போது மோதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மணலாறில் இராணுவத்தினரின் இரு பதுங்கு குழிகளை ஊடறுத்து செல்ல புலிகள் முற்பட்டபோது மற்றொரு மோதல் இடம் பெற்றதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது. (சி)

கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல பகுதிகளிலும் படையினர் வீதித்தடைகளை அமைத்துமுள்ளனர். சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வரும் இடங்களைச் சுற்றியும் பல முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தற்போது கிழக்கில் ஆயிரக்கணக்கான படையினர் நிலைகொண்டுள்ளதும் தெரிந்ததே. (சி)

650 படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பெருமளவினர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கியே தமது கால்களை இழந்துள்ளனராம்.

தற்போது புலிகள் கையாளும் மிதிவெடி தாக்குதல் முன்னர் 'வியட்நாமில்' புகழ் பெற்ற தாக்குதலாக இருந்ததாக படைஅதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

தியாகி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கும் பாடப்பட்டன.

இரத்த தானம் வழங்குதல் உட்பட பொது வைபவங்கள் மற்றும் சிரமதான நடவடிக்கைகள் ஆகியவையும் பரவலாக இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பெருமளவில் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டதை காண முடிந்தது. (56-க)

தனிநபர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வங்கி நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையர் ஒருவர் 470 அமெரிக்க டொலரையும், பாகிஸ்தானியர் 380 டொலரையும், இந்தியர் 350 டொலரையும், பங்களாதேஷில் ஒருவர் 210 டொலரையும், நேபாளி 170 டொலரையும் தனிநபர் வருமானமாகப் பெறுவதாக உலகவங்கி தனது அறிக்கையில் கூறியுள்ளது.

இலங்கையின் தற்போதைய சனத்தொகை 1 கோடியே 72 லட்சம் எனவும் அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே இந்த பாதுகாப்பு நடவடிக்கை என்றும் அச் செய்திகள் கூறுகின்றன.

எனினும் ஜனாதிபதி சார்க் நாடுகளுக்கான பயணத்தை யொட்டியே இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் படுவதாகவும் கூறப்படுகிறது. (சி)

முன்னாள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மல் அதிகரித்து வரும் குழப்ப நிலையை அடுத்தே திரு. ஜெயவர்த்தனாவின் வீட்டுப் பாதுகாப்பும் பலப்படுத்தப் பட்டுள்ளதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை திரு. ஜெயவர்த்தன அண்மையில் லலித் அத்துலத்முதலி காமினி திஸநாயக்கா ஆகியோரை பாதுகாப்பு விடயத்தில் அக்கறை காட்டுமாறு எச்சரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)


## தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

தகைமைகள்: 8ம் வகுப்புத் தொடக்கம்
க. பொ. த (உயர்தரம்) வரை.

உயரம்: 5' 6''.

வயது: 18 – 30 வரை.

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 21-09-92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேராக சமுகந் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(எ 2443)


100 கோடி ரூபா

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தார்.

18 குற்றங்களை ஜெயலலிதாவும், அவரது சகாக்களும் புரிந்துள்ளதாகவும் 100 கோடி ரூபாவுக்கு ஊழல் நடைபெற்றிருப்பதாகவும் முதலமைச்சர் ஜெயலலிதா மீதும் ஏனையவர்கள் மீதும் வழக்குத் தாக்கல் செய்ய ஆளுநர் அனுமதி வழங்கவேண்டுமென்றும் அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

தி. மு. க. தலைவர் கருணாநிதி தலைமையில் சென்ற ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அடங்கிய ஊர்வலம் ஆளுநர் மாளிகைக்குச் சென்று மகஜரைக் கையளித்தது.

இதேவேளை முதல்வர் ஜெயலலிதாவின் தனிமனிதராஜாங்கத்தை கண்டித்து அ. தி. மு. க.வினுள்ளே பெரும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [க-சி]


## மரண அறிவித்தல்

## சுந்தரமூர்த்தி சிவதாசன்

சுந்தரமூர்த்தி சிவதாசன் காலமானார். அன்னார் வடலியடைப்பைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி கனகம்மாவின் மகனும், ஜெயானந்தியின் அன்புக் கணவரும், கிரிதரனின் தந்தையும், கருணாநிதி ஜெகநாதன், Dr. இராஜினி ஸ்ரீகாந்தா (கொழும்பு) ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி, திருமதி இரத்தினசபாபதியின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-09-92 (இன்று) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அரசடி நவாலியில் நடைபெறும்.

தகவல்:
சி. ஜெயானந்தி
(மனைவி)

(சி-6816)



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் நிறுவனத்தார் சார்பில் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence Number D/10336.